**30 டிசம்பர் 2016**

**சென்னை இந்தியா.**

# பிரஸ் வெளியீடு

## பியர்சன் அகாடெமி இந்தியா, தொழில் சார்ந்த தேர்வுகளை மேலும் அறிவதற்காக மக்களுக்கு உதவ, ஆறு இந்திய மொழிகளில் தொழில் வழிகாட்டல் கருவிகளை அறிமுகப்படுத்துகிறது.

உளவியல் மதிப்பீட்டில் உலகளவில் ஒரு முன்னணி வெளியீட்டாளராகிய பியர்சன் மருத்துவ & திறமை மதிப்பீட்டின் சேவை மையமாகிய பியர்சன் அகாடெமி இந்தியா (PAI) நிறுவனம், தொழில் சார்ந்த வழிகாட்டலுக்காக இன்று 'என் விருப்பம் என் எதிர்காலம் ' (எம்சி எம் எப் - மை சாய்ஸ் மை பியூச்சர் ) எனும் ஒரு ஆன்லைன் ஆளுமை மதிப்பீடு தீர்வை (ஆன் லைன் பெர்சனாலிட்டி அசெஸ்மென்ட் சல்யூஷன்) ஆறு **இந்திய மொழிகளில் பதிப்பீடுகளை** வெளியிட்டது. பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்புகளுக்குத் தக்க தங்கள் மாதிரி ஆளுமை பண்புகளை வடிவமைக்கவும் தங்கள் உண்மை ஆளுமைகளை கண்டுபிடிக்கவும், எம். சி. எம். எப்.வலிமையூட்டுகிறது. IIT -சென்னையில் நடந்த இந்த துவக்க விழா நிகழ்வில் தேசீய கூட்டமைப்பு உளவியலாளர்களின் (NAoP) 26வது

வருடாந்திர மாநாட்டில் நாடு முழுவதிலுமிருந்து கல்வியாளர்கள், பள்ளி மற்றும் மனநல நிபுணர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆங்கிலம் தவிர்த்து, MCMF -இன் இந்திய மொழிப் பதிப்பீடுகளில் **பெரும்பான்மையான ஆறு இந்திய மொழிகளாகிய – இந்தி, பெங்காலி, கன்னடம், மலையாளம், தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில்,** மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தங்கள் ஆளுமையை சுய மதிப்பீடு செய்து கொள்ள முடியும். இந்த கூடுதலான மொழிப் பதிப்புகள், மை சாய்ஸ் மை பியூச்சர் -ன் ஆங்கில பதிப்பை தழுவி லட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் தொழில் நிபுணர்களுக்கு தொழில் சார்ந்த தீர்வுகளை எடுக்க அதிக தகவல்களை அளித்து வலிமையூட்டுகிறது. இந்தியாவில் ஆங்கிலம் பேசாத பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்பட்ட நீண்ட இடைவெளியை. (MCMF)-ன் இந்திய மொழிப் பதிவு தொழில் வழிகாட்டல் கருவிகள் பூர்த்தி செய்கின்றன.

MCMF - அதன் ஆங்கிலப் பதிவுகள் மற்றும் அதன் இந்திய மொழிப் பதிவுகள் மூலமாக பியர்சன் அகாடெமி இந்தியா (PAI), அதன் தொழில் சார்ந்த தீர்வுகளை 12 ஆம் வகுப்பு மற்றும் உயர் கல்வி பகுதிகளுக்கும் வழங்குகிறது. இத்தகைய அறிவியல் மற்றும் கலாச்சாரம் தொடர்பான தொழில் வழிகாட்டல் தீர்வுகளை ஆயிரக்கணக்கான பள்ளிகள் மற்றும் பான் இந்தியாவின் இதர கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் பியர்சன் அகாடெமி இந்தியா, குறிப்பாக ஆங்கில அறிவு இல்லாத அல்லது குறைந்த அளவு உள்ள இளைஞர்களுக்கு தங்கள் தொழில் சார்ந்த தேர்வுகளை சரியான வகையில் எடுக்க முடியாமல் சிரமப்படும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உதவ வேண்டும் என்று குறிக்கோள் கொண்டுள்ளது.

## மை சாய்ஸ் மை பியூச்சர் என்பது ..

ஒரு மாதிரியாக, இந்தியாவில் 4200 மாணவர்களின் மதிப்பீட்டை புள்ளியியல் ரீதியாக கணித்து மற்றும் ஒரு ஆழ்ந்த அனுபவ ஆராய்ச்சியின் அடிப்படையில் MCMF அமைக்கப்பட்டுள்ளது. இந்திய சூழலில் அமைந்துள்ள தொழில்களில், நம்பகமானவை கணிக்கப்பட்டு **பனிரெண்டு ஆளுமை பண்புகளில்** ஒரு தனி பண்பை MCMF மதிப்பீடு செய்கிறது. இந்த பனிரெண்டு பண்புகள் மறுபடியும் **நான்கு அடிப்படை ஆளுமை பண்புகளாக** மற்றும் **எட்டு தொழில் சார்ந்த ஆளுமை பண்புகளாக** வரையறுக்கப்படுகிறது. ஒரு தனி நபர் தொடர விரும்பும் தொழில் பாதைக்கு அப்பாற்பட்டு இந்த அடிப்படை ஆளுமை பண்புகள் முக்கியமானவை. தொழில் சார்ந்த ஆளுமை பண்புகள் தொழில் தளத்துக்கு தொடர்புள்ளவையே. ஒவ்வொரு ஆளுமை பண்பும் ஆறு பரிமாணங்களால் அளவிடப்படுகிறது.

30 நிமிட மதிப்பீட்டுக்கு முடிவில் தேர்வாளர்கள், ஒரு சரியான சுயமாக உருவாக்கப்பட்ட, விரிவான மற்றும் தனிப்பட்ட ஆளுமை அறிக்கையை பெறுவார்கள். பியர்சன் அகாடெமி இந்தியா , தேர்வாளர்களை அதன் சான்றிதழ் பெற்ற ஆலோசகர்களுடன் தேசீய அளவிலான பிணைப்புடன் இணைக்கிறது. இதன் மூலம் தேர்வாளர்கள் MCMF-ன் ஆளுமை அறிக்கையின் அடிப்படையில், தரவுடன் கூடிய தொழில் ஆலோசனையை தீர்வின் ஒரு பாகமாக பெற முடியும்.

## MCMF ன் லாபங்கள்

- **தேர்வாளர், மாணவர் அல்லது தொழில் வல்லுநர் ஒரு தகவல் மற்றும் குறிக்கோள் கொண்ட தொழில் சார்ந்த தீர்வுகளை முடிவு செய்ய தேவையான உறுதியான நுண்ணறிவுடன், தொழில் தொடர்பு கொண்ட ஆளுமை பண்புகளை பெற முடிகிறது.**

- **பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளின் தொழில் விருப்பத்திற்குத் தக்க அவர்களுக்குள் உருவாகும் ஆளுமையின் முக்கிய அம்சங்களை புரிந்து. கொண்டு அவர்களின் சுய வளர்ச்சி மற்றும் தொழில் சார்ந்த விருப்பத்திற்கு துணை புரிய முடியும்.**

- **பள்ளி மற்றும் தொழில் ஆலோசகர்கள் , மாணவர்கள் மற்றும் இதர தனி நபர்களின் ஆளுமை சுயவிவரங்களின் அடிப்படையில் , கருத்துள்ள, பலனளிக்கும் ஆலோசனையை மற்றும் சரியான தொழில் பாதையை தேர்வு செய்ய அறிவுரை வழங்க கருத்துள்ள தகவல்களை பெற முடியும்**

## MCMF ன் இந்திய மொழிப் பதிவுகளை உபயோகிப்பதன் லாபங்கள்:

- மொழித் தேர்வுகள்,போதுமான அளவு ஆங்கில அறிவில்லாதவர்களிடையே, தேர்வாளரின் தொழில் விருப்பங்கள் மற்றும் ஆளுமை வேறுபாடுகளை துல்லியமாக கண்டுபிடிக்க முடியும்.

- பள்ளிகளில் தாய்மொழி வழிக் கல்வி மூலம் பயின்ற மாணவர்கள் முக்கியமான கல்வி மைல்கல்லை அடையும்போது சரியான தொழில் வழிகாட்டலைப் பெற முடியும்.

- அரசு ஆதரவுடைய திறமை வளர்ச்சி மற்றும் கல்வி திட்டங்கள் நகர்ப்புறங்களுக்கு அப்பால் வசிக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கிடையே தங்களது ஆய்வுகளை விரிவாக்கலாம்
- இந்த ஆன்லைன் மதிப்பீட்டிற்கான இந்திய மொழிப் பதிவுகள் இந்திய அரசின் டிஜிட்டல் இந்தியாவை உருவாக்க முயற்சிகளை வழங்க முடியும்.

பியர்சன் மருத்துவ மற்றும் திறமை மதிப்பீடு நிறுவனத்தின் நாட்டின் தலைமை இயக்குனர், திரு **பிலிப் குரியன்**, " இந்த MCMF இந்திய மொழிப் பதிவுகளை சந்தைப்படுத்துவதன் மூலம் இந்திய மக்களுக்குத் தகுந்தவாறு எங்களின் உலகத் தரத்தை பிரதிபலிக்கும் மதிப்பீடு பொருளை அறிமுகப் படுத்தவேண்டும் எனும் எங்கள் கடமையை நிறைவு செய்ய ஒரு வழியாக தேர்ந்தெடுக்கிறோம். என்று கூறினார். இதனால் MCMF இந்திய மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தங்களின் தொழில் பயணத்தை அவர்களின் விருப்பமான மொழிக்குத் தக்க கருத்துக் செறிவுள்ள நுண்ணறிவின் அடிப்படையில் தங்கள் தொழில் சார்ந்த பயணத்தை வகுத்துக் கொள்ள உதவ முடியும்" என்று கூறினார்.

வெளியீட்டு விழாவில், **திரு எல் எஸ் கணேஷ்** பேராசிரியர், மேலாண்மை கல்வித் துறை, சென்னை ஐ ஐ டி தனது சொற்பொழிவில் முக்கிய கருத்தாக கூறியதாவது - எங்களது இளைஞர்கள் முக்கியமாக தங்கள் தொழில் கண்ணோட்டத்தில் தங்கள் ஆளுமையை நம்பகமான வழியில் மதிப்பீடு செய்ய முடிய வேண்டும். ஒரு நபரின் தொழில் விருப்பத்துடன் கூடிய ஆளுமை நிலை தனது பணியிடை தயாரிப்பை அதிகஅளவில் மேம்படுத்தும் வண்ணம் மற்றும் தொழில் ரீதியான திருப்தியை அனுபவிக்க முடியும் வண்ணம் அமைய வேண்டும். "என்று கூறினார்.

---

**பியர்சன் அகாடெமி இந்தியா**, (PAI) பியர்சன் மருத்துவ மற்றும் திறமை மதிப்பீட்டின் (PCTA)சேவை மையமாகும். உளவியல் மதிப்பீடு & தலையீடு சேவைகள், தொழில் பயிற்சி & சான்றிதழ் மற்றும் தொழில் ஆலோசனை சேவைகள் மூலமாக PAI ன் சேவைகள் பெரிய உளவியல் பண்பாடு மற்றும் சிறந்த கல்வியை எல்லா நபர்களுக்கும் உருவாக்க உதவுகிறது.

PAI ன் சேவைகள் குறித்து மேற்கொண்டு அறிய. www.pearsonclinical.in/pai என்ற வலைத் தளத்தில் பார்க்கவும்.

**பியர்சன் மருத்துவ & திறமை மதிப்பீடு** (PCTA) 100 வருடங்களுக்கும் மேலாக சோதனை பதிப்பீட்டில் முன்னணியில் உள்ளது. அநேக சோதனைகள் அந்தந்த துறைகளில் சர்வதேச அளவில் தரம் வாய்ந்ததாக இன்றைய நாட்களில் இருக்கும்படி செய்வது அதன் கடமையாகும். மன

நலம் மற்றும் உளவியல் பண்பாட்டை மேம்படுத்த உளவியல் மதிப்பீடு மற்றும் தலையீடு தீர்வுகள் தொழில் ரீதியான உபயோகத்தின் மூலமாக தனிப்பட்ட, கல்வியறிவு மற்றும் தொழில்ரீதியான வாழ்வை எல்லா வயதிலும் அளிக்க உதவ வேண்டும் என்பதற்காக PCTA அமைப்பு உருவானது. இது உலக முன்னணி நிறுவனமான பியர்சன் நிறுவனத்தின் ஒரு பகுதியாகும்.

**பியர்சன் மருத்துவ & திறமை மதிப்பீடு நிறுவனம்** குறித்து மேற்கொண்டு அறிய (PCTA) www.pearsonclinical.in. என்ற வலைத் தளத்தில் பார்க்கவும்.

---

குறிப்புகள் :

**போத் பிரிட்ஜ்** என்பவரால் எம். சி. எம். எப். உருவாக்கப் பட்டது. இது இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி, சென்னையில் மூத்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் மேலாண்மை படிப்பு துறையில் இணைந்து செயலாற்றும் ஒரு கல்வி சேவை நிறுவனமாகும். இது (PCTA)போத் பிரிட்ஜ் நிறுவனத்துடன் பிரத்தியேகமான கூட்டாண்மையை கொண்டது. MCMF ஐ, ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிப் பதிவுகளில் நிறுவனங்களுக்கும் மற்றும் தனி நபர்களுக்கும் இந்தியாவிலும் மற்றும் இந்திய துணைக் கண்டத்திலும் கிடைக்கும்படி உதவி செய்கிறது.